03.10.2024

R.L.T.O.P.No. 7/2023

ம.சா.1.திரு. கதிரேசன், த.பெ.கணபதி.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. இன்று நான், எனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல்செய்கிறேன். 20.02.1995ம் தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். **(**அந்த ஆவணம் ம.சா.ஆ**-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** 02.08.2023ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல். **(**அந்த ஆவணம் ம.சா.ஆ**-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** மேற்படி அறிவிப்பை எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல். **(**அந்த ஆவணம் ம.சா.ஆ**-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** 06.09.2023ம் தேதியிட்ட எதிர்மனுதாரரின் பதிலறிவிப்பு அசல். **(**அந்த ஆவணம் ம.சா.ஆ**-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** 22.09.2023ம் தேதியிட்ட வில்லங்கச்சான்றிதழ், கணினி நகல். **(**அந்த ஆவணம் ம.சா.ஆ**-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

(குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)